

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஜி.அரியூர் கூட்ரோடு அருகே புதிதாக நிறுவப்பட்ட 75 அடி உயர கொடிக்கம்பத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்கள், இந்த நிகழ்வில் வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தே.மலையரசன் எம்.பி, ஒன்றிய கழக செயலாளர் எம்.ராஜேந்திரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் என ஏராளமானோர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்திட

# ANSR நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நிறுவனம் கையெழுத்திட்டது!



சென்னை, நவ. 22-

தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நிறுவனம் (Guidance Tamil Nadu), உலகளாவிய திறன் மையங்களை (GCCs) நிறுவுதல் மற்றும் விரிவாக்குவதில் உலக அளவில் முன்னணியில் உள்ள ANSR நிறுவனத்துடன் நேற்று (20.11.2025) ஒரு முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது. ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் மற்றும் அதிவேகமாக வளரும் தொழில் நிறுவனங்களுக்காக உலகளாவிய திறன் மையங்களை (Global Capability CentresGCC) நிறுவுவதில் ANSR நிபுணத்துவம் பெற்றது.

இந்தக் கூட்டாண்மை, தொழில்நுட்பம், புதுமை மற்றும் உயர் மதிப்புள்ள உலகளாவிய சேவைகளுக்கான உலகின் மிகவும் கவர்ச்சிகரமான இடங்களுள் ஒன்றாக தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லாகத் திகழும்.

200க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்களை (GCC) நிறுவியுள்ள,

2 இலட்சத்திற்கும் அதிகமான உலகளாவிய நிபுணர்களைப் பணியமர்த்தி; 21 ஆண்டுகால செயல்பாட்டு நிபுணத்துவம் கொண்டு 12 மில்லியன் சதுர அடி ரியல் எஸ்டேட் கட்டமைப்பை செயல்படுத்தியுள்ள ANSR மற்றும் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் வேகமாக வளரும் உலகளாவிய நிறுவனங்களுக்கான திறன் மையங்களை உருவாக்குதிலும் விரிவாக்குவதிலும் முன்னணியில் உள்ளன. அவர்களின் நிபுணத்துவம் செயற்கை நுண்ணறிவு பொறியியல், இணையப் பாதுகாப்பு, தயாரிப்பு மேம்பாடு, டிஜிட்டல் வர்த்தகம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), தரவு அறிவியல் மற்றும் நிறுவன செயல்பாடுகள் (Enterprise operations) ஆகியவற்றில் பரவியுள்ளது.

தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் இந்த ஒப்பந்தம் குறித்து கூறும்போது:

“இந்தக் கூட்டாண்மை மூலம், ANSR அடுத்தகட்ட உலகளாவிய நிறுவனங்களைக் கொண்டு வர உதவும். கொள்கை வசதிகள், விரைவான ஒப்புதல்கள், இடத் தேர்வு மற்றும் வலுவான திறமை இணைப்புகள் ஆகியவற்றில் நாங்கள் அவர்களுக்கு ஆதரவளிப்போம்.

உலககளாவிய திறன் மேம்பாட்டு மையத்திற்கு உலகிலேயே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற நாங்கள் விரும்புகிறோம். தொழில்நுட்பம், ஆட்டோமொபைல், BFSI (வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு), பொறியியல், விண்வெளி மற்றும் சில்லறை வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளதைக் காண்கிறீர்கள். அவர்கள் எங்களின் திறமை, எங்களின் உள்கட்டமைப்பு மற்றும் இந்த அரசின் ஸ்திரத்தன்மையின் காரணமாக தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர்.”

ANSR நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி லலித் அஹூஜா அவர்கள் இந்த ஒப்பந்தம் குறித்து கூறும் போது :

“வலுவான திறமை, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, முற்போக்கான நிர்வாகம் மற்றும் செழிப்பான புத்தாக்கச் சூழல் ஆகியவற்றுடன், உலகிலேயே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த GCC இலக்கு மாநிலமாக மாறத் தேவையான அனைத்து அம்சங்களையும் தமிழ்நாடு கொண்டுள்ளது. அடுத்த தலைமுறை உலகளாவிய நிறுவனங்களை மாநிலத்திற்குக் கொண்டு வர அரசாங்கத்துடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.” என்று குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம், ஆட்டோமொபைல், BFSI, பொறியியல், விண்வெளி மற்றும் சில்லறை வர்த்தகத் துறைகளில் உள்ள முன்னணி உலகளாவிய நிறுவனங்களின் GCCகளுக்கு தமிழ்நாடு ஏற்கனவே தாயகமாக உள்ளது. மாநிலத்தின் அர்ப்பணிப்புள்ள GCC கொள்கை, நிகரற்ற வேலைவாய்ப்புத் தகுதி மற்றும் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப பணியாளர்களுடன், ANSR உடனான இந்த ஒத்துழைப்பு வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க முதலீடுகள், மேம்பட்ட புத்தாக்கத் திறன்கள் மற்றும் 10,000க்கும் மேற்பட்ட உயர் மதிப்புள்ள GCC வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாட்டின் GCC களுக்கான முதன்மையான உலகளாவிய இடமாக மாறும் பயணத்தில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், புதுமை, போட்டித்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிக்கும் எதிர்காலத்திற்குத் தயாரான டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அதன் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துகிறது.

# தி.மு.க. பொறியாளர் அணி காணொலிக் கூட்டம்!

## மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் தி.மு.க. பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் மாநில நிர்வாகிகள் மற்றும் பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும் காணொலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

திராவிட முன்னேற்ற கழக
பொறியாளர் அணி

**பொருள்:**

1) தீவிர வாக்காளர் சீர்திருத்த பணியில் வாக்குச்சாவடி முகவர்களுக்குப் பொறியாளர் அணியின் உதவுவது.

2) நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு பொறியாளர் அணியினர் செய்ய வேண்டிய நலத்திட்ட உதவிகள் குறித்து.

3) பொறியாளர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் சமூக ஊடக பயிற்சி முகாம் நடத்துவது குறித்து.

அனைவரும் தவறாமல் காணொலி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஈராச்சி ஊராட்சி, கசவன்குன்று கிராமத்தில் ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்யும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், கோவில்பட்டி சங்கரபாண்டியன் தூத்துக்குடி வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் செந்தில்வேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மாவட்டம், விருதுநகர் மதுரை சாலையில் அமைந்துள்ள கே.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பொருட்காட்சி மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் இணைந்து , “அறிவும் வளமும் என்ற பொருண்மையின் கீழ், விருதுநகர் நான்காவது புத்தகத் திருவிழா 2025 இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.

## ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் –

# புதுடெல்லியில் - எஸ்.செல்வகுமாரி எழுதிய ‘சட்டத்தின் குரல்’ நூல் வெளியீட்டு விழா!

## மேனாள் நீதியரசர்கள் – மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பங்கேற்பு!

புதுடெல்லி, நவ. 22 -

சென்னை ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் ‘சட்டத்தின் குரல்’ என்ற நூல் புதுடெல்லியில் வெளியிடப்பட்டது.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர் எஸ்.செல்வகுமாரி எழுதிய ‘சட்டத்தின் குரல்’ நூல் வெளியீட்டு விழா, புதுடெல்லி, ரபி மார்க் - கான்ஸ்டிட்யூசன் கிளப் ஆப் இந்தியா’வில் நேற்று (21.11.2025-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு மேனாள் தலைமை நீதியரசர் எம். கற்பக விநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

நூலை வெளியிட்டு, மேனாள் தலைமை நீதியரசர் (சென்னை உயர்நீதிமன்றம்) டி.ராஜா அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

மேனாள் நீதியரசர், உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் எஸ். நாகமுத்து, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் எஸ். எஸ். சுந்தர் மற்றும் மாநிலங்களவை கழக உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பவுண்டேசன், சென்னை சார்பில் அதன் இயக்குநர் மோ. பாட்டழகன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.எஸ். அகிலன் ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

## திருப்பத்தூரில் 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# ரூ.24 கோடியில் 3080 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கி சிறப்புரை!

சிவகங்கை, நவ. 22-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் 72 வது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் கோ. ராஜேந்தர் பிரசாத் வரவேற்று பேசினார்.மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நிர்வாக இயக்குனர் திருமதி உமாமகேஸ்வரி திட்ட விளக்க உரை ஆற்றினார். நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர் த.சேங்கைமாறன், திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகுல ராணி நாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் ரூபாய் 24 கோடியில் 3080 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் , சிறப்பாக பணிபுரிந்த கூட்டுறவு சங்கங்களை பாராட்டி கேடயம் ஆகியவற்றை வழங்கி பேசியதாவது.

இந்தியாவிலேயே தமிழகத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதிலும் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றதும் கூட்டுறவு துறை பல்வேறு வழிகளில் மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் பொதுமக்களுக்கான குடிமைபொருள் வழங்கும் திட்டம், கிராமங்களில் விவசாயிகளுக்கு பயிர் கடன், சுய மகளீர் குழுக்களுக்கான நிதி உதவி, உட்பட 24 வகையான கடன்களை வழங்கி வருகின்றது.

இது தவிர சுயமகளிர் குழுக்களுக்கு கடனுதவி பயிர் கடன் போன்றவற்றில் முக்கியத்துவம் செலுத்தி வருகிறது. மக்களின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும் துறையாக கூட்டுறவு துறை செயல்பட்டு வருகிறது. புயல், மழை வெள்ள நிவாரணத்தின் பொழுதும் மக்களுக்கு நிவாரண உதவிகளை கொண்டு சேர்க்கும் துறை கூட்டுறவுத்துறை ஆகும். தமிழக முதல்வர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கி கூட்டுறவுத் துறை மக்களுக்கு சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார்.

அதன்படி தமிழகத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த துறை மூலம் ரூபாய் 5000 கோடி நகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.ரூபாய் 2500,கோடி மகளிர் குழுகடன் தள்ளுபடி செய்யப்பட்டது. 128 குழுக்களுக்கு மேல்முறையீடு செய்ததன் மூலமாக ரூபாய் 67 லட்சம் நிதி வழங்கப்பட உள்ளது. மக்களின் துயரங்களை புரிந்து கொண்டு அந்த துயரை தீர்ப்பது தான் கூட்டுறவுத் துறைஆகும்.விவசாய கடன் 12ஆயிரம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் முதல்வர் விவசாயி வயிற்றில் பால் வார்த்துள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சியில் 10ஆண்டுகளில் ரூபாய் 60ஆயிரம் கோடி கடன் உதவி வழங்கப்பட்டது. தளபதி அவர்கள் முதல்வராக பதவி ஏற்றதும் ரூபாய் 14 ஆயிரம் கோடி பயிர் கடன் வழங்கப்பட்டது. தற்பொழுது ரூபாய் 16,000 கோடி பயிர் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் நிறைவேறும். வங்கிப் பரிவர்த்தனையில் இந்த ஆண்டு 1. 10 ஆயிரம் கோடி ரூபாய் வசூல் செய்து வரலாறு படைத்துள்ளது. ஒன்றிய அரசு தமிழக அரசுக்கும் இடையே அரசியல் சூழ்நிலையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளது. ஆனால் இந்த அரசின் செயல்பாடுகளை அதுவும் குறிப்பாக கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகளை ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அமித்ஷா தமிழக கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகளை பாராட்டி ஐந்து விருதுகளை வழங்கி உள்ளார். எனவே ஒன்றிய அரசு பாராட்டும் வகையில் கூட்டுறவுத்துறை செயல்பட்டு வருகிறது. இதற்காக கூட்டுறவுத்துறை அதிகாரிகள் ஊழியர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

தற்பொழுது முதல்வர் அவர்களால் 70 வயது உள்ளவர்களுக்கு அவர்கள் வீடு தேடி பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதன் மூலம் 22 லட்சம் குடும்பங்கள் பயன்பெறுகிறார்கள் . தற்பொழுது முதல்வர் அவர்கள் 70 வயதில் இருந்து 65 வயதாக குறைத்து அவர்களுக்கு ம் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்து உள்ளார் மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்று கூட்டுறவு துறைக்கு அறிவுறுத்தி உள்ளார் .

தமிழகத்தில் மாவட்ட கூட்டுறவு வங்கி கிளைகள் 24 கிளைகள் செயல்பட்டு வருகிறது இது நூறு சதவீதம் நல்ல லாபத்துடன் தமிழகத்தில் இயங்குகிறது. பிற மாநிலங்களில் குடிமைப் பொருட்கள் தனியார் துறை மூலம் வழங்கப்படுகிறது . ஆனால் தமிழகத்தில் தான் அரசின் சார்பில் இது வழங்கப்பட்டு வருகின்றது .இதை உச்ச நீதிமன்றமே தமிழகத்தில் பொதுவினியோகத் திட்டம் செயல்படும் முறையினை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் நம்முடைய மாவட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்த பொழுது கூட்டுறவு துறையில் மட்டும் ரூபாய் 30 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டது. இரண்டே நாட்களில் இன்று 3080 பயனாளிகளுக்கு ரூபாய் 24 கோடியில் பல்வேறு மதிப்பிலான கடன்கள் வழங்கப்படுகின்றது. இந்த சாதனைகள் தொடங்க வேண்டும். மக்கள் நிம்மதியாக வளமாக வாழ பல்வேறு திட்டங் களை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். பொதுமக்களின் தேவையை அறிந்து அதை நிறைவேற்ற முதல்வர் அவர்கள் இடைவிடாது பணியாற்றி வருகிறார்.

இத்தகைய முதல்வரின் நல்லாட்சி தமிழகத்தில் தொடர வேண்டும். அதற்கு பொது மக்களாகிய நீங்கள் உங்களது ஆதரவினை நல்க வேண்டும் .அரசிற்கு எத்தகைய நிதிச் சுமைகள் இருந்தாலும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் இருந்து முதல்வர் பின்வாங்கியதில்லை . கடந்த நான்கு ஆண்டுகளில் நான்கு முறை நான் சட்டமன்ற உறுப்பினராக உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அமைச்சராக பதவி ஏற்று உள்ளேன். அதற்கு உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். முன்பு கலைஞர் ஆட்சியில் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த போது பல்வேறு பணிகளை மேற்கொண்டு தலைவர் கலைஞரிடம் பாராட்டினை பெற்றேன். அதனை தொடர்ந்து தற்பொழுது கூட்டுறவுத் துறையில் நான் செயலாற்றி வருகிறேன்.

இத்தகைய கூட்டுறவுத் துறையினை எனக்கு அளித்த முதல்வருக்கு நான் மிகவும் நன்றி கடன் பட்டிருக்கிறேன் .இதற்கு காரணமான தொகுதி மக்களாகிய உங்களுக்கு நான் என்றும் விசுவாசமாக இருப்பேன். உங்களுக்காக உழைப்பேன்.

இவ்வாறு கூட்டுறத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கான்முகமது, இணைப்பதிவாளர்கள் ஏ.செந்தில்குமார், பொன்ராஜ்,நா.மதி, சே.பாலு வே.சேரன், மு .அன்பரசி, பி.திருப்பதி, திருமதி பா.பூங்கோதை. ஆர். செல்வம், ஆர் ஜெய்சங்கர், இராரிச்சர்ட் பிரகாஷ்., கார்டன் ஆர்.உஷா ஸ்ரீ மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்ம.ரவி ஒன்றிய செயலாளர்கள் விராமதி மாணிக்கம்,

எஸ் .சண்முக வடிவேல் குன்னக்குடி சுப்பிரமணியன், திருமலை முத்துராமலிங்கம் , ஒன்றிய துணை செயலாளர் எஸ் ,முத்துக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, தொ.மு.ச.முருகேசன், பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன் அயலக அணி சன் சீமான் சுப்பையா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப்பாளர் முகமது கனி ,தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளி முத்து, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ் எஸ் .எஸ்.ஏ வல்லபாய், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பவானி கணேசன், தொண்டரணி ராஜேஸ்வரி, நிர்வாகிகள் .உதயம் சண்முகம், சேவியர், சுப்பிரமணியன் உட்பட கூட்டுறவுத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். முடிவில் துணைப்பதிவாளர் மு .செந்தில் குமார் நன்றி கூறினார்.